
# அறிவார்ந்து இருங்கள்

## இணையம்வழி பாலியல் உறவுக்குத் தயார்ப்படுத்துதல்



நம்பிக்கையும் உணர்வுகளும் சம்பந்தப்பட்ட உறவில் ஈடுபட, வயதுவராத ஒருவரை இணையம்வழி தயார்ப்படுத்தும் செயலை இது குறிக்கிறது. பாலியல் ஆசைக்குப் பயன்படுத்திக் கொள்வது அல்லது பலாத்காரம் செய்வது இதன் நோக்கமாக இருக்கும். இணைய அரங்கங்கள், அரட்டை குழுக்கள், சமூக ஊடகம், குறுந்தகவல் தளங்கள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

## இது எவ்வாறு நடக்கிறது?







- பிள்ளைகள் இணைய ஊடகத் தளங்களில் பகிர்ந்துகொள்ளும் தகவல்களின் வாயிலாக இணைய வேட்டையாடிகள் அவர்களை எட்டமுடியும். குறிப்பாக, தாங்கள் செல்லும் இடங்கள் அல்லது பள்ளிகள் பற்றிய தகவல்களைப் பிள்ளைகள் பகிர்ந்து கொள்ளும்போது
- இணைய வேட்டையாடிகள் வயதுவராத பிள்ளைகளுடன் தொடர்பை வளர்த்துக்கொள்ள பொழுதுபோக்கு குழுக்களுக்கும் செல்லக்கூடும்
- சில சமயங்களில், வேட்டையாடிகள் "கேட்ஃபிஷ்" செய்ய முயலக்கூடும் – அதாவது இணையத்தில் வேறொருவராகப் பாசாங்கு செய்து உறவை வளர்க்க முயற்சி செய்யக்கடும். பெரும்பாலும் வயதுவராத பிள்ளையின் வயதை ஒத்த ஒருவரைப் போல பாசாங்கு செய்வார்கள்.
- வயதுவராதவர்களின் அப்பாவித்தனத்தையும், பாலியல் நடத்தை பற்றிய அறியாமையையும், அன்பளிப்புகளுக்கும் அன்புக்கும் ஆட்படும் இயல்பையும் அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். அதோடு, பாலியல் நடத்தை, நடவடிக்கைகள் பற்றி தவறான தகவலையும் வேட்டையாடிகள் வழங்கக்கூடும்.
- வயதுவராதவரின் நம்பிக்கையைப் பெற்ற பிறகு, பாலியல் தலைப்புகளுக்கு உரையாடலைத் திசைதிருப்புவது வேட்டையாடிகளின் வழக்கம். அதன்பிறகு, தந்திரமாக வயதுவராதவரை இணையம்வழி பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்துவார்கள் அல்லது நேருக்கு நேர் சந்திக்க ஏற்பாடு செய்வார்கள்.
- பிள்ளையை உடன்படச் செய்வதற்கு உணர்வுபூர்வமான மிரட்டலையும் வற்புறுத்தலையும்கூட அவர்கள் பயன்படுத்தக்கூடும்.

## நான் எதற்காக இதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்?

- மின்னிலக்கக் கல்வி ஆய்வுக் கழகமான DQ கழகத்தின் 2018 அறிக்கையின்படி, சிங்கப்பூரிலுள்ள 8 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள், பாலியல் வேட்டையாடிகளால் குறி வைக்கப்படும் அபாயத்தில் உள்ளனர்.
- சிங்கப்பூர் பிள்ளைகளில் 16 விழுக்காட்டினர் இணையம்வழியான பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர். அதாவது, பாலியல் உள்ளடக்கங்களைக் கொண்ட இணையத்தளங்களைத் தேடுதல் மற்றும்/அல்லது பார்த்தல், மற்றும்/அல்லது தெரியாதவர்களுடன் இணையத்தில் பாலியல் உரையாடல்களில் ஈடுபடுதல்.
- 12 விழுக்காட்டினர் இணையம்வழி சந்தித்த தெரியாதவர்களை நேரில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.


#அறிவார்ந்து இருங்கள்

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

ஆதரவளித்தவர்:

இவரது ஆதரவுடன்:

# என் பிள்ளை இணையம்வழி பாலியல் உறவுக்குத் தயார்ப்படுத்தப்படுகிறாரா என்பதை நான் எப்படி தெரிந்து கொள்வது?



**பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தங்கள் நிலைமையை இரகசியமாக வைத்திருக்கக்கூடும் என்பதால், அறிகுறிகளைக் கண்டுகொள்வது சிரமமாக இருக்கலாம். இருந்தாலும், பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் பின்வரும் மாற்றங்களை நீங்கள் கவனிக்கலாம்:**

- அவர்கள் இணையத்தில் அதிக நேரம் செலவிடுவதோடு, கைப்பேசியை அல்லது சமூக ஊடகத் தளங்களை விட்டு விலகி இருக்க சிரமப்படுவார்கள்.
- மற்றவர்களுடனான இணையக் கலந்துறவாடல்களை அவர்கள் மிகவும் இரகசியமாக வைத்திருப்பார்கள். அதோடு, தங்களது இணைய உரையாடல்களைப் பெற்றோர் பார்க்கவிடாமல் தீவிரமாகத் தடுப்பார்கள்.






- அவர்களால் வாங்க முடியாத அல்லது கணக்கு காட்ட முடியாத உடைகள், கைப்பேசிகள் அல்லது அதிகளவு பணத்தை அவர்கள் அன்பளிப்பாகப் பெறக்கூடும்.

- நண்பர்களைச் சந்திக்க தொலைதூர இடங்களுக்குச் செல்லுதல் போன்ற வழக்கத்திற்கு மாறான நடத்தைகளும் தென்படலாம்.
- பெற்றோர் பிள்ளைகளுக்குத் தெரியுமென எதிர்பார்க்காத பாலியல் சொற்களை அவர்கள் பயன்படுத்தக்கூடும்.
- உள்வாங்குதல், மனத்தவிப்பு, மனச்சோர்வு, கோபம் அல்லது பற்றிக்கொள்ளுதல் போன்ற வழக்கத்திற்கு மாறான இயல்புகளையும் அவர்கள் வெளிக்காட்டலாம்.



## #அறிவார்ந்து இருங்கள்


நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

1CLICK AWAY Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL
ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
TOUCH Cyber Wellness
SINDA Singapore Indian Development Association
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!

# என் பிள்ளை இணையம்வழி பாலியல் உறவுக்குத் தயார்ப்படுத்தப்படுவதாக எனக்குச் சந்தேகம் எழுந்தால் நான் என்ன செய்யமுடியும்?

- அளவுக்கதிகமாக உணர்ச்சிவசப்படாதீர்கள். ஏனெனில் அது உங்கள் பிள்ளையை அந்நியப்படுத்தி, உங்களை நம்பி எதுவும் சொல்வதைத் தடுத்துவிடக்கூடும். பிள்ளைக்கு ஆதரவாக நீங்கள் இருப்பீர்கள் என உறுதி அளித்திடுங்கள்.
- மற்றொரு தரப்புடன் உங்கள் பிள்ளை பேசிக் கொண்டிருக்கும் உரையாடலைப் பார்வையிட அனுமதி கேளுங்கள். அவர்களுக்கு இடையில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள விரும்புவதாக எடுத்துச் சொல்லுங்கள்.
- உங்கள் பிள்ளை பாலியல் உறவுக்குத் தயார்ப்படுத்தப்படுவதாக அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக நம்புவதற்குக் காரணங்கள் இருந்தால், போலிசாரிடம் புகார் செய்யுங்கள். இணையக் கலந்துறவாடல் நடந்த சாதனங்களைப் பத்திரப்படுத்தி வைத்து, ஆதாரம் திரட்டுங்கள்.
- பெற்றோர்கள் டச் சைபர் வெல்னஸின் டச்லைன் சேவையை 1800 377 2252 என்ற எண்ணில் அழைத்து, இளையர் தொடர்பான விவகாரங்களில் அனுபவமுள்ள ஆலோசகர்களிடம் பேசலாம்.

## என் பிள்ளை இணையம்வழி பாலியல் உறவுக்குத் தயார்ப்படுத்தப்படுகிறாரா என்பதை நான் எப்படி தெரிந்து கொள்வது?



- உங்கள் பிள்ளை இணையம்வழி எதைப் பகிர்ந்து கொள்கிறார் என்பதை அவர் அறிந்திருப்பதை உறுதிப்படுத்துங்கள். பொது மற்றும் சமூக ஊடகத் தளங்களிலும், இணைய நண்பர்களிடமும் முக்கியமான தனிப்பட்ட விவரங்களை அவர்கள் பகிர்ந்து கொள்ளாதிருப்பதையும் உறுதிப்படுத்துங்கள்
- பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளைப் பற்றி நீங்கள் இணையத்தில் பகிர்ந்து கொள்பவை அனைத்தும் அவர்களது மின்னிலக்கத் தடத்தில் பதிவாகும் என்பதை அறிந்திருங்கள்.
- பல்வேறு பதிவேற்றங்கள், புகைப்படங்கள், காணொளிகள் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கும் தனிப்பட்ட விவரங்களை வேட்டையாடிகளால் ஒருங்கிணைக்க முடியும்.




#அறிவார்ந்து இருங்கள்

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

1CLICK AWAY Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL
ஆதரவளித்தவர்:
IMDA INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
TOUCH Cyber Wellness
SINDA Singapore Indian Development Association
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!




- பிள்ளைகளின் இணையப் பயன்பாட்டையும் நடவடிக்கைகளையும் அணுக்கமாகக் கண்காணித்திடுங்கள். அவர்கள் ஈடுபடும் ஊடகத் தளங்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளைகள் மிகவும் இளவயதினராக இருந்தால், அவர்களது சாதனங்களில் பெற்றோரின் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துங்கள்.
- தெரியாதவர்கள் அனுப்பும் மின்னஞ்சல்கள், தகவல்கள் ஆகியவற்றை ஏற்பது அல்லது கோப்புகளைத் திறப்பது ஆபத்தானது என்பதை உங்கள் பிள்ளைகளிடம் விளக்குங்கள். அவற்றில் கணினிக்கிருமிகள் அல்லது வேண்டாத தகவல்கள் இருக்கலாம்.
- இணையத்தில் மட்டுமே சந்தித்த ஒருவரை நேரில் சந்திப்பது ஆபத்தாகிவிடலாம் என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். அவ்வாறு செய்வதற்கு அவர்கள் பெற்றோரிடம் அனுமதி பெறவேண்டும். சாத்தியப்பட்டால், நீங்கள் உடனிருப்பது நல்லது.

- வயதுக்குப் பொருத்தமான முறையில், பாலியல் உறவு பற்றி உங்கள் பிள்ளையிடம் எடுத்துச் சொல்லுங்கள்.
- தவறான பாலியல் உறவிலிருந்தும் உடல்ரீதியான தொடர்பிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எல்லைகள் வகுக்கக் கற்றுக் கொடுங்கள்.
- உங்கள் பிள்ளைகளுடன் நம்பிக்கைமிக்க உறவை வளர்த்துக் கொள்ளுங்கள். அப்போதுதான், அவர்கள் ஈடுபடும் நடவடிக்கைகள் பற்றி உங்களிடம் தயங்காமல் பேசுவார்கள். இதன்வழி உங்கள் பிள்ளையின் நடவடிக்கையை நீங்கள் கண்காணிக்க முடியும். அதே சமயத்தில், நீங்கள் அவர்களைக் கண்காணிப்பதாக அவர்களுக்கும் தோன்றாது.
- ஏதேனும் ஒரு கட்டத்தில் பிள்ளைகளுக்கு அசௌகரியமாக, கவலையாக அல்லது பயமாக இருந்தால், உதவிக்கு உங்களை அணுகலாம் என உறுதி அளித்திடுங்கள்.



#அறிவார்ந்து இருங்கள்

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

1 CLICK AWAY — Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
TOUCH Cyber Wellness
SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!